OS.No. 370/2018

Date : 27.01.2026

Witness Name & Rank – பழனிச்சாமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 முதல் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. மேற்படி வழக்கு சொத்தானது எனது மாமனாரின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது மாமனார் மறைவை தொடர்ந்து எனது மனைவிக்கும் அவரது தாயாருக்கும் தல 1/20 பங்கு என்பதும் மற்ற மகன்களுக்கு 6/20 பங்கு என்றால் சரியல்ல. எங்களது திருமணத்தின் போது 30 சவரன் தங்கம் சீர்வரிசை செய்து நல்ல முறையில் திருமணம் செய்து கொடுத்தனர் என்றால் இல்லை. அவ்வாறு எனது மனைவிக்கு நல்ல முறையில் சீர்வரிசை செய்த நிலையிலும் அவரது தாயார் வயதான காலத்தால் அவருக்கு பணமாக ரூபாய் 5000 கொடுத்ததால் எனது மனைவியும் அவரது தாயாரும் சொத்தில் யாதொரு பங்கும் வேண்டாம் என சொல்லிவிட்டார்கள் என்றால் இல்லை. வழக்கில் மூன்று மற்றும் நான்கு அட்டவணை சொத்துக்கள் ஏற்கனவே விற்கப்பட்டு விட்டவை என்றால் இல்லை இன்னும் விற்பனை செய்யவில்லை.
2. பிரதிவாதிகள் மூன்று முதல் ஐந்து மற்றும் அருணாச்சலம் ஆகியோர் வழக்கு அட்டவணை மூன்று மற்றும் நான்கு சொத்துக்களை விற்பனை செய்து விட்டனர் என்றால் அது தெரியாது எங்களுக்கு தெரியாமல் விற்பனை செய்திருக்கலாம். 15.09.1998 ல் எனது மாமியாரும் மற்ற ஆண் மக்கள் மூன்று பேரும் வழக்குசொத்து அட்டவனை 4 ஐ பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகம் செய்து கொண்டனர் என்றால் அது எங்களுக்கு தெரியாமல் செய்து கொண்டனர். நான் சொல்வது தவறு என்றும் எனக்கும் எனது மனைவிக்கும் மேற்படி பாகம் தொடர்பாக நன்கு தெரியும் வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல வழக்கு அட்டவணை 3 வது சொத்தை பொறுத்து ஆண் மக்கள் 15.02.2010 ம் தேதி பாகம் செய்து கொண்டனர் என்றால் எங்களுக்கு தெரியாமல் செய்து கொண்டனர். நான் சொல்வது தவறு என்றும் எனக்கும் எனது மனைவிக்கும் மேற்படி பாகம் தொடர்பாக நன்கு தெரியும் வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

3. நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் அருணாச்சலம் எவ்வளவு தொகை தர வேண்டும் என்றால் 30 லட்சம் தர வேண்டும். மேற்படி கடனுக்கு கைமாறாக 31.05.2012 ல் செட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் எழுதிய சொத்து அருணாச்சலத்தின் பூர்வீக சொத்து என்றால் அவரது தந்தையின் சொத்து. வழக்கில் சொல்லி உள்ள வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்தில் ஈட்டப் பட்ட வருமானத்தின் அடிப்படையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனவே மேற்படி அருணாச்சலம் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து பூர்வீக சொத்து தான் அது அருணாச்சலத்தின் தந்தையால் தனிப்பட்ட முறையில் சம்பாதிக்கப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல.
4. மேற்படி அருணாச்சலம் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தில் அவரது மகள்கள் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லைமேற்படி செட்டில்மெண்ட் ஆவணமானது அருணாச்சலம் தான் பெற்ற கடனுக்காக எழுதிக் கொடுத்த நிலையிலும் அவரது மகள்கள் அந்த ஆவணத்தின் கையொப்பம் செய்யாத நிலையிலும் அந்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல அது எவ்வகையிலும் வழக்கு தரப்பினர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வரவில்லை எனவே அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எனவே நான் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் நான் அந்த சொத்தை உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா எனது மனைவி பெயரில் 08.07.2014 ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக வாங்கப்பட்டது எனவே அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.
5. 2014 முன்பு சொத்தை அனுபவித்து வந்ததை காட்ட வேறு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை . 1996 ல் எனது மாமனார் மறைத்த பிறகு 2014 வரை எனது மனைவி தரப்பில் எந்த பாகமும் கோரவில்லை எனவே இந்த வழக்கானது காலவரை சட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளாகியுள்ளது அந்த அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1996 க்கு பிறகு பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் அடிப்படையில் பாகம் செய்து கொண்டார்கள் அந்த பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து

செய்ய சொல்லி பரிகாரம் கோராமல் நாங்கள் பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு தெரிந்து பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம், கியைரப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவே எனது மனைவியின் உரிமைமூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது எனது மனைவி பாகம் பிரிவினை கோரும் பரிகாரத்தில் இருந்து விளக்கப்பட்டுவிட்டார் ( Ouster) எனவே எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**12 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.